**செய்தி வெளியீடு எண்: 119** **நாள்: 19.02.2018**

## செய்தி வெளியீடு

மைய அரசின் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை (CRZ) 2011ன்படி, மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் துறையின் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி சுற்றுச்சூழல் துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி நீடித்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் (NCSCM), சென்னை என்ற மைய அரசின் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு இத்திட்டம் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 வழிமுறைகள் படி தமிழகத்திற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் இணைப்பு 1, பத்தி IV(a) ன் படி தமிழகத்திற்கான வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்து அரசுத் துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகங்கள், பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை அறிய 19.02.2018 அன்று சுற்றுச்சூழல் துறையின் இணையதளத்திலும் (http://www.environment.tn.nic.in) மற்றும் இத்துறையின் ENVIS மையத்தின் இணையதளத்திலும் (http://www.tnenvis.nic.in) வெளியிடப்படும்.

எனவே, நிறுவனங்கள், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் குறித்த தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின், இத்திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேதியில் இருந்து 45 நாட்களுக்குள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுத்து மூலம் இத்துறைக்கு 06.04.2018க்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**